1990 மே 8]

துணை விவசாயக் கிடங்கு

*8256 திரு. அ. பாப்பா சுந்தரம்:
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குளித்தலை ஒன்றியம், நங்கவரம் பகுதியில் துணை விவசாயக் கிடங்கு திறக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும் ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). 1990-91 ஆம் ஆண்டிற்கு புதிதாக 100 துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள் தோற்றுவிக்கப்படவிருப்பதால் நங்கவரம் பகுதியில் ஒரு துணை வேளாண்மை விரிவாக்க மையம் அமைக்க வாய்ப்பு உள்ளது.

மலட்டாறு

*2641 திரு. சி. கோவிந்தராஜன் :
மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள மலட்டாற்றில் தண்ணீர் வருவது நின்றுவிட்டபடியால் அதை மராமத்து செய்து பாசனத்திற்காக ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் ஏதும் தற்போது அரசின் வசம் இல்லை.

9-20 மணி.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலட்டாறு சேனல் திருக்கோவிலூர் அணைக் கட்டப்பட்டதிலிருந்து பிரிந்து வரக்கூடிய 5 சேனல்களில் ஒன்று. 20, 22 ஆண்டுகளுக்கு முன்னால் பெண்ணை ஆற்றில் வெள்ளம் வந்த காரணத்தால், அதுவும் இதுவும் கலந்து மண்மேடாக ஆகி, அதனால் நெல்லிக்குப்பம் தொகுதி, பண்ருட்டித் தொகுதி, திருநாவலூர் தொகுதியிலுள்ள கிட்டத்தட்ட 20 ஆயிரம் ஏக்கருக்குப் பாசன வசதி தடைப்பட்டிருக்கிறது. அதை, மறுபரிசீலனை செய்து மராமத்து செய்து கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.